# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.570/2023

| | |
|---|---|
| | Prosecution PW 4 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | ரமேஷ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 16.07.2024

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் குட்டைக்கடை, பாரதி நகரில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 09.10.2022 ம் தேதி கலை சுமார் 6.00 – 6.30 ஒரு விசேசத்திற்காக மேற்கிலிருந்து கிழக்காக கரூர் - ஈரோடு ரோட்டில் இடதுபுறமாக சென்றுகொண்டிருந்தேன். ஆண்டவர்நகர் பிரிவு அருகே கும்பலாக இருந்தது. சென்று பார்த்தபோது விபத்தில் ஹீரோஹோண்டா இருசக்கர வாகனத்தில் வந்தவரும், அக்சஸ் வாகனத்தில் வந்தவரும்

ஒம்/.எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

அடிபட்டு கிடந்தனர். அடிபட்ட இருவரையும் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு நான் கிளம்பிவிட்டேன். பின்னர், சண்முகம் என்பவர் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சி குவிமுச பிரிவு 161 க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

கடந்த 09.10.2022 ம் தேதி ஆஜர் எதிரி டிஎன்91 பி 9491 என்ற ஹோண்டா இருசக்கர வாகனத்தில் எனக்கு பின்னால் வாகனத்தில் வந்தவர் என்னைக் கடந்து சென்று முன்னாள் சென்றுகொண்டிருந்த டிஎன் 47 ஏகியு 7186 அக்சஸ் வாகனம் ஒட்டிவந்த சண்முகத்தின் மீது மோதியதாகவும், சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் கூறிவிட்டு தற்போது அடிபட்டுக் கிடந்த பின்புதான் நான் சென்று பார்த்தேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/.எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்